செய்தி வெளியீடு எண்: 094 நாள் : 12.02.2016

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளி / கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ்மொழியின்மீது ஆர்வத்தையும் பற்றையும் ஏற்படுத்தும் வகையில் **“இளந்தமிழர் இலக்கியப் பட்டறை’’** எனும் இலக்கியம் தொடர்பான பயிற்சித் திட்டம் 2012–13ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு, தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு வார காலம் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இப்பயிற்சியில் கவிதை, கட்டுரை, பேச்சுக்கலை, புதினம், சிறுகதை, நாடகம், திறனாய்வு, நகைச்சுவை, அறிவியல் கட்டுரைகள் உருவாக்குதல் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர், தமிழில் பிழையின்றி எழுதுதல் போன்ற பல்வேறு பொருண்மைகளில் துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் பயிற்சிப் பட்டறை சென்னை–600 008, எழும்பூர், உலகப் பல்கலைக்கழகச் சேவை மையத்தில் 15.02.2016 முதல் 21.02.2016 வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையை மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் 15.02.2016 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி வைத்து சிறப்புரையாற்றவும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் த. உதயச்சந்திரன் இஆப அவர்கள் தலைமையுரையாற்றவும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்கள் வரவேற்புரையாற்றவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கவும் உள்ளனர். இந்நிகழ்ச்சியில் தமிழறிஞர்களும் தமிழார்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9